5. தகவல் கோரல்

மேதகு ஆளுநரின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மேதகு ஆளுநர் அவர்கள்* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மேதகு ஆளுநர் குறித்து அவையில் விவாதிப்பது குறித்து விதி தெளிவாக இருக்கிறது. நான் உங்களைப் பேச அனுமதித்தாலும் அவற்றை நீக்க வேண்டிவரும்.* (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: *1995–ல், இதே அவையில் மேதகு ஆளுநர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; அவரை நீக்க வேண்டும் என்று தீர்மானம் கடந்த காலத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு, அதுகுறித்த விவாதங்கள் அவைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கின்றன.* (மேசையைத் தட்டும் ஒலி) *அன்றைக்கு இருந்த அமைச்சர் நாவலர் அவர்கள் அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். இது ஏதோ தனிப்பட்ட முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக எடுத்து வைக்கக்கூடிய விவாதம் அல்ல. ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய உங்களுக்கும் சேர்த்துத்தான் இந்த விவாதத்தை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *எனவே, இதை நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் வேறு என்ன பிரச்சினைகள் குறித்துப் பேசினாலும், நான் உங்கள் கருத்துகளை. . .*

திரு. மு.க. ஸ்டாலின்: *நான் அவை விதியை மீறிப் பேசவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Record *செய்வதற்கு, பேச அனுமதிப்பதற்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், விதி தெளிவாக இருக்கிறது. விதி 92* (vii)*–ன்கீழ், 'மேதகு ஆளுநரைப் பற்றியோ. . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2018 ஜுன் 25]

திரு. மு.க. ஸ்டாலின்: *அதைத் தளர்த்திதான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குடியரசுத் தலைவர் குறித்து, இந்த அவையில் பேசுவதற்கு எந்த விதியும் அனுமதிக்கவில்லை. விதி 92* (vii) *தெளிவாக இருக்கிறது. உங்களுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும் நீங்கள் வேண்டுமென்றே என்னைக் கேட்கிறீர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *இல்லை, இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதை அனுமதிக்க முடியாது. மேதகு ஆளுநர் அவர்களைக் குறித்து இந்த அவையில் பேச முடியாது.* (குறுக்கீடு)

முற்பகல் 11–20

திரு. மு.க. ஸ்டாலின்: *அவைக் குறிப்பில் இருப்பதைத்தான் நான் படிக்கிறேன். அவைக் குறிப்பில் இருக்கிறது. அதைப் படிப்பதற்கு அனுமதி கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொஞ்சம் இருங்கள்.* (குறுக்கீடு) *அவைக் குறிப்பில் இருப்பதை நீங்கள் படித்தால்கூட, அதில் ஆளுநரைப்பற்றி வந்தால், நான் அவற்றை நீக்க வேண்டியிருக்கும்.* (குறுக்கீடுகள்) *நான் நீக்கவில்லை.* (குறுக்கீடுகள்)

(திராவிட *முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.*)

அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) *எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும். அவரும், நானும் பேசிக் கொண்டிருக்கிறோம்.* (குறுக்கீடுகள்) *திரு. சாமி, நீங்கள் கருப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு அழகாக இருக்கிறீர்கள், உட்காருங்கள்.* (சிரிப்பு) (குறுக்கீடுகள்) *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏற்கெனவே அவைக் குறிப்பில் இருப்பதை எடுத்து வந்து இங்கு படிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அது ஏற்கெனவே அவைக் குறிப்பில் இருக்கிறது. அதைப் படிக்க வேண்டிய* necessity *இல்லை. இருந்தாலும் படிக்கிறேன் என்று சொல்கிறீர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *அதையொட்டித்தான் என்னுடைய கருத்தைச் சொல்ல வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சொல்லுங்கள்.*

[2018 ஜூன் 25

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், மாநில சுயாட்சிகளுக்காக முதன்முதலில் தீர்மானம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில்தான் போடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய, மாநில உறவுகள் குறித்து முதன்முதலில் நிபுணர் குழு அமைத்து, அதற்கு ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டதும் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான்; இந்த அவையில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போதுள்ள ஆட்சிக்கு முன்பு வரை, இந்த மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் சரி, தற்போது ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. ஆட்சியிலும் சரி, எந்த நேரத்திலும் தமிழக அரசினுடைய உரிமையை எந்த நிலையிலும் விட்டுக் கொடுத்ததாக வரலாறு இல்லை. ஆனால், இந்த அவையில் விதிகளையே suspend செய்து, இதே அவையில் மாநில ஆளுநரைப் பற்றி விவாதம் நடத்தி, அவரைத் திரும்பப் பெற வேண்டும் என்று தீர்மானமே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது அவைக் குறிப்பில் தெளிவாக இடம்பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியிருக்கின்ற மாநிலத்தில், மாநில ஆளுநர் அவர்கள்**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் மற்ற பொதுவான விஷயங்களைப் பற்றிச் சொன்னீர்கள். நீங்கள் சொன்னதை நானும் அனுமதித்தேன். ஆனால், மேற்கொண்டு பேச வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நாட்டில் நடப்பதைப்பற்றி, நீங்கள் வெளியில் பேசுவதைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. இந்த அவையில் விதிகளின்படிதான் பேச வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதாக இருந்தாலும் சரி, நான் இந்த அவையை நடத்த வேண்டுமானாலும் சரி, விதிகளின்படிதான் செய்ய முடியும். விதி எண் 92 (vii)–ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆளுநரைக் குறித்து விவாதம் செய்வதற்கு அனுமதி இல்லை என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு பொருள் குறித்து, ஏற்கெனவே அவை நடவடிக்கை குறிப்பில் இருக்கின்ற சில விவரங்களை, நீங்கள் இந்த அவையில் சொல்லியிருக்கிறீர்கள். அது சரி; அவ்வளவுதான். விதி எண் 287–ஐ mention செய்துதான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 25] [பேரவைத் தலைவர்]

நீங்கள் சொல்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், விதி எண் 92 (vii)*–ன்படி, ஆளுநர் குறித்து இந்த அவையில் பேசக் கூடாது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.*

அதுமட்டுமல்ல; அந்த விதியில், விதி 287–ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அந்த விதியைத் தளர்த்துவதற்கும் விதிகளில் இடமில்லை. நான் விதிகளின்படிதான் இந்த அவையை நடத்திக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) *என்னைப் பொறுத்தவரையில்,* (குறுக்கீடுகள்) *நான் சொல்வதைக் கேளுங்கள்.* (குறுக்கீடுகள்) *நீங்கள் ஒரு மரபைச் சுட்டிக்காட்டி, அந்த மரபின்படி ஒரு பொருளை எடுத்துக்கொள்ள வேண்டும்; விவாதிக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன்; விதி தெளிவாக இருக்கிறது; விதிகளில் தெளிவாக இல்லை என்றால்தான், மரபின்வழி செல்ல வேண்டும். மரபு எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்றால், விதி தெளிவாக இல்லாதபோதுதான். விதி தெளிவாக இல்லையென்றால்தான், நான் மரபுகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும். விதி தெளிவாக இருக்கிறது. விதி எண் 92* (vii)*–ஐ நிறுத்தி வைப்பதற்கோ, தளர்த்துவதற்கோ அதிகாரம் இல்லை என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அவற்றை நான் அனுமதிக்கவில்லை.* (குறுக்கீடு) *ஏற்கெனவே, அன்றைக்கு அனுமதித்ததைப் பற்றியெல்லாம் இங்கே பேச வேண்டாம். இன்றைக்கு நான் அதை அனுமதிக்கவில்லை.* (குறுக்கீடு)

முற்பகல் 11–25

ஒரு நிமிடம். (குறுக்கீடு) *உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் சொல்கின்ற சம்பவம் 1995–ல் நடைபெற்றது. அதற்குப் பிறகு தளர்த்தக் கூடாது என்கின்ற விதி சேர்க்கப்பட்டது எப்போது என்று கேட்டால், 1999–ல்தான் சேர்க்கப்பட்டு, கெஜட்டில் வெளியாகியிருக்கிறது. அந்த விதியைத்தான் நாம் இப்போது பின்பற்றிக்கொண்டிருக்கின்றோம். ஆக, அந்த விதியைத் தளர்த்திப் பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. வேறு ஏதாவது புது பிரச்சினையாக, ஆளுநர் அல்லாத வேறு பிரச்சினைகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினால், நான் அனுமதிக்கிறேன். நீங்கள் தாராளமாகப் பேசுங்கள். இந்த விதியைத் தளர்த்துவதற்கு. . .*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த விதி தளர்த்தப்பட்டு, அனுமதி தந்து, தீர்மானமே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அதுவல்ல.

திரு. மு.க. ஸ்டாலின்: அதே அடிப்படையில்தான் இப்போது நீங்கள் விதியைத் தளர்த்துங்கள். உங்களிடத்திலே நான் வைக்கக்கூடிய வேண்டுகோள். ஏற்கெனவே எப்படி இதே அவையிலே விதிமுறை தளர்த்தப்பட்டிருக்கிறதோ, அந்த அடிப்படையிலே அதைத் தளர்த்தி, அவை அலுவல்களை ஒத்திவைத்து, அதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த விதியைத் தளர்த்த வேண்டுமென்றுதான் கேட்டீர்கள். 1995–லே அந்த சம்பவம் நடந்திருக்கிறது. 1995–க்குப் பின்னால் 1999–லே 92(vii)–ஐத் தளர்த்தக் கூடாது என்று தெளிவாக, விதியைத் திருத்தி, விதிகள் குழு ஒரு தீர்மானமே நிறைவேற்றி, Gazette Notification செய்யப்பட்டு, அதற்குப் பின்னாலேதான் விதிகளில் சேர்த்திருக்கிறோம். அந்த புதிய விதிகளை வைத்துத்தான், இப்போது நாம் அவையை நடத்திக்கொண்டிருக்கிறோம். இப்போது அதைத் தளர்த்துவதற்கு விதியிலும் இடமில்லை; நானும் விரும்பவில்லை. ஆகவே, மரபுகள் எப்போது வரும் என்று கேட்டீர்களென்றால், விதி தெளிவாக இல்லையென்றால் மரபுக்குப் போகலாம். தளர்த்தக் கூடாது என்று விதி தெளிவாக இருக்கிறது. நான் விதியைத் தளர்த்த விரும்பவில்லை. நீங்கள் விதிகளுக்குள்ளாகப் பேசுங்கள். நீங்கள் விதிகளுக்குள்ளாகப் பேசினால் நான் அனுமதிக்கின்றேன்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995–ல் விதியைத் தளர்த்திப் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, தீர்மானமே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆளுநரை நீக்க வேண்டுமென்று தீர்மானமே இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது அவைக் குறிப்பில் இருக்கிறது. அந்த அடிப்படையில்தான், நான் உங்களிடத்தில் அனுமதி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள். . .

திரு. மு.க. ஸ்டாலின்: இப்போது நீங்கள் சொல்லக்கூடிய விதிகளை ஏற்றுக்கொள்கிறேன். மறுக்கவில்லை. ஆனால், தளர்த்துவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. அதற்குரிய எல்லா உரிமைகளும் உண்டு. எனவே அதைத் தளர்த்தி அதுபற்றி விவாதிப்பதற்கு நாங்கள் உங்களிடத்தில் நேரம் கேட்கிறோம். நீங்கள் அதற்கு நேரம் இல்லை என்று சொன்னால், வாய்ப்பு வழங்கவில்லை என்று சொன்னால், நாங்கள் அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், என்னுடைய விளக்கத்தைக் கேட்டுவிட்டு அதற்குப் பிறகு நீங்கள் வெளியே போகலாம். உங்கள் விருப்பம் அது. வெளிநடப்புச் செய்வதும், வெளிநடப்புச் செய்யாததும் உங்களுடைய விருப்பம். நான் தெளிவாக முன்பே சொல்லிவிட்டேன். 92(vii) விதியைத் தளர்த்துவதற்கு இந்த அவையிலே ஏற்கெனவே இருந்த மரபைச் சொல்கிறீர்கள். அந்த விதியைத் தளர்த்துவதற்கு அப்போது விதி இருந்தது. ஆனால், 1999–லே அந்த விதியைத் தளர்த்தக் கூடாது என்று சொல்லி, விதிகள் குழு தெளிவாகத் தீர்மானம் போட்டு, Gazette Notification–ஆகி, அந்த புதிய விதிகளைத்தான் இப்போது நாம் பின்பற்றுகிறோம். இப்போது அந்த விதிகள் இருக்கும்போது, நான் எப்படி அந்த விதியைத் தளர்த்தமுடியும்? அப்படியே இருந்தாலும், இந்த விதியை நான் தளர்த்த விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, விதி தெளிவாக இருக்கிறது. 287 விதிக்கு அடுத்ததாகப் பாருங்கள். "எனினும் விதி 92(vii)–ஐ நிறுத்திவைப்பதற்கு, மேற்படி விதிகளைப் பயன்படுத்தக் கூடாது" என்று தெளிவாகவே 1999-லே விதியிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1999–ன் புதிய விதியின்படிதான், நாம் இப்போது அவையை நடத்திக்கொண்டிருக்கிறோம். மேற்கொண்டு அதை நீங்கள் விவாதிக்க வேண்டுமென்று சொன்னால், முடியாது. விதிகளின்படி என்ன வேண்டுமானாலும் கேளுங்கள். நான் அனுமதிக்கிறேன். என்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டீர்கள். இந்தச் சமயத்தில் இதற்கு இந்த விதியை விதிமுறைகளுக்குப் புறம்பாக நான் பயன்படுத்த விரும்பவில்லை. ஆகவே, நீங்கள் இதற்கு எனக்கு ஒத்துழைக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு முழு மனதோடு ஒத்துழைப்புத் தர நாங்கள் தயார். ஆனால், மாநில சுயாட்சி பறிபோகக்கூடிய நிலையிலே— ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக தனிப்பட்ட முறையிலே நான் இதைக் கேட்கவில்லை. நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆட்சி அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. இந்த ஆட்சிக்கு பக்கபலமாக இருக்கக்கூடிய அந்த நிலையிலேதான், இந்த மாநிலத்திற்கென்று இருக்கக்கூடிய உரிமைகளை எக்காரணங்களைக்கொண்டும் விட்டுவிடக் கூடாது என்ற சூழ்நிலையின் அடிப்படையிலேதான், நான் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *ஆனால், நீங்கள் விதியைத் தளர்த்தி அனுமதி தர முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டீர்கள். எனவே, இதுபற்றி விவாதிக்க நீங்கள் அனுமதிக்காத காரணத்தால், அதைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

(*திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.*)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது உங்கள் உரிமை. ஆனால், அதைத் தளர்த்துவதற்கு எந்தவகையிலும் விதிகளில் இடமில்லை. அதை நான் தளர்த்தவும் விரும்பவில்லை.* (குறுக்கீடு) *மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அதிகாரத்திற்குட்பட்ட, நம்முடைய அரசினுடைய அதிகாரம் கையைவிட்டுப் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தப் பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு நமது அரசும் ஒத்துழைக்க வேண்டும். அரசினுடைய அதிகாரம் பறிபோய்விடக் கூடாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதையே நீங்களும்* repeat *செய்ய வேண்டாம். வேறு புதிய கருத்து ஏதும் இருந்தால், சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *அதே கருத்தை நீங்கள் வற்புறுத்துவதில் அர்த்தம் இல்லை. ஏனெனில், அதை நான் நிராகரித்துவிட்டேன். மேற்கொண்டு அதை நான் அனுமதிப்பதாக இல்லை.* (குறுக்கீடு) *நீங்கள் புதிய கருத்து ஏதாவது சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள்.*

2018 ஜூன் 25]

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இதுகுறித்து விவாதிக்க அனுமதிக்காததால், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், சொல்லுங்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சிக்கு எதிராக, ** மேதகு ஆளுநர் அவர்கள் ** பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிக்காத காரணத்தினால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக நானும் வெளிநடப்புச் செய்கிறேன்.*

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் அதெல்லாம் ஒன்றும் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் குழம்பிப்போய் இருப்பீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அதில் உங்களுக்கு ஒன்றும் பிரச்சினையில்லை, உட்காருங்கள்.*

6. கவன ஈர்ப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் வட்ட மருத்துவமனை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*